# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003


முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 09.11.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பயிலரங்கம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்ககத்தின் கீழ் இயங்கும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், புதிடில்லியில் உள்ள புவி அறிவியல் அமைச்சகம், குஜராத் ஆனந்தில் உள்ள வேளாண் வானிலை ஆய்வாளர்கள் கூட்டமைப்பு மற்றும் நபார்டு வங்கி ஆகிய நிறுவனங்கள் இணைந்து **"மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப வேளாண் வானிலை ஆலோசனை"** என்ற **விவசாயிகளுக்கான** விழிப்புணர்வு பயிலரங்கம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் 08.11.2023 அன்று நடைபெற்றது.

பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.கே.கலாராணி அவர்கள் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்களையும், இப்பயிலரங்கத்தில் கலந்துக் கொண்ட சிறப்பு விருந்தினர்கள், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் அனைவரையும் வரவேற்றார்.

துணைவேந்தர் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். அவர் கூறுகையில் வானிலை முன்னறிவிப்பு துல்லியத்தன்மை அதிகரிக்கப்பட்டுள்ளதையும், பல்கலைக்கழகத்தின் மூலம் கொடுக்கப்பட்டு வரும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகால முன்னறிவிப்பு பற்றியும் விளக்கினார். புவி அறிவியல் அமைச்சகத்திலுள்ளதிரு.D. செந்தில் பாண்டியன் ஐஏஎஸ், இணைச்செயலாளர் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி, புது டெல்லி அவர்கள் தனது சிறப்புரையில் இந்திய புவி அறிவியல் அமைச்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பற்றி விவரித்தார். இந்திய வானிலைத் துறையிலுள்ள முனைவர்.எஸ்.சி.பான், கூடுதல் இயக்குநர் ஜெனரல் மற்றும் தலைவர், வேளாண் ஆலோசனை சேவைகள் பிரிவு, புது டெல்லி அவர்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள வானிலை வலைப்பின்னலின் பயன்பாடுகள் பற்றி பாராட்டி கூறினார்.

புவி அறிவியல் அமைச்சகத்திலுள்ள முனைவர் ஜக்வீர்சிங் அவர்கள் காலநிலை மாற்றத்தினால் வேளாண்மையில் ஏற்படும் இடர்பாடுகளை ஆய்வு மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பிராந்திய வானிலை மையத்தின் வானிலை ஆய்வு துணை இயக்குநர் ஜெனரல் முனைவர் சே.பாலச்சந்திரன் அவர்கள் இந்திய வானிலைத் துறையினால் விவசாயிகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் சேவைகளைக் குறித்து பேசினார். வேளாண் வானிலை ஆய்வாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் முனைவர் கே.கே.சிங் அவர்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆற்றி வரும் வேளாண் வானிலைச் சேவைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். கோயமுத்தூர் மாவட்ட நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. திருமலை ராவ் அவர்கள் நபார்டு வங்கியின் பல்வேறு முக்கிய திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க இயக்குநர் முனைவர் பி.பி. முருகன் அவர்கள் மாவட்ட வேளாண் வானிலை மையத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வானிலைச் சார்ந்த வேளாண் ஆலோசனைகள் குறித்து அறிவுறுத்தினார்.

இந்த பயிலரங்கத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 400-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு விஞ்ஞானிகள் வானிலை சார்ந்த வேளாண்மை பற்றிய தொழில்நுட்ப உரைகளை எடுத்துரைத்தனர். பயிலரங்கத்தின் நிறைவாக வேளாண் காலநிலை ஆரய்ச்சி மையத்தின் தலைவர் முனைவர் ந.க.சத்தியமூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**